கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

| எனது இல. / මගේ අංකය / My No. | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date |
|---|---|---|
| சுற்றுநிருப இல: 2015/01 | | 24/04/2015 |

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்வி அலுவலகர்கள்
சகல ஆசிரிய ஆலோசகர்கள்

## மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டம்

வட மாகாணத்திலே கடந்த 30 ஆண்டு காலப் போரினாலான பாதிப்புக்களும், அதன் பின்னரான சூழல் மாற்றங்களும் மாணவர்கள் மத்தியில் பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றது. குறிப்பாகப் போஷாக்கின்மை, அதீத போஷாக்கு, பாலியல் துஷ்பிரயோகம், பதின்ம வயதுக் கர்ப்பம், சிகரெட், மதுபானம், போதைவஸ்து பாவனை மற்றும் தனிநபர் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தற்போதைய மாணவர்கள் மத்தியில் கூடுதலாக இனங் காணப்பட்டுள்ளன.

இச் சுற்றறிக்கையானது மேற்படி பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக கடந்த 09.04.2015 மற்றும் 15.04.2015 ஆகிய தினங்களில் வட மாகாண கல்வி மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளியிடப்படுகின்றது.
ஆகவே, கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

1. வலய மட்டத்திலே மாணவர் ஆரோக்கிய மேம்பாடு சம்பந்தமான அதிபர்களுக்கான அறிமுக கலந்துரையாடலை முதல் வருடத்திலே தவணைக்கொரு முறையும், பின்னர் வருடத்திற்கொரு முறையும் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ஏற்பாடு செய்தல் வேண்டும். மேற்படி கலந்துரையாடலில் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலகர்கள், மாகாண உளசமூக வளநிலைய முகாமையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோர் பங்குபற்றல் வேண்டும். மேலும் சுகாதாரத்துறை சார்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உளநல மருத்துவ நிபுணர் அல்லது உளநல வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, தாய் சேய் நல வைத்திய அதிகாரி, பாடசாலை வைத்திய அதிகாரி, சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள், உளவளத்துணை ஆலோசகர்கள், சமூக மருத்துவ உத்தியோகத்தர்கள் (சுதேச மருத்துவம்), பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் அழைக்கப்படல் வேண்டும். மேலும் மாணவர் ஆரோக்கிய மேம்பாடு தொடர்பான மீளாய்வுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் ஆகியவை அதிபர்களிற்கான மாதாந்த கலந்துரையாடல்களினூடாக மேற்கொள்ளப்படலாம். இதற்காக குறித்த துறைசார்ந்தவர்கள் இக் கலந்துரையாடல்களிற்காக அழைக்கப்படலாம்.

2. விஞ்ஞான மற்றும் சுகாதார உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், சுகாதாரக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரிற்கு இனப்பெருக்க சுகாதார கல்வியைப் பொருத்தமான முறையில் கற்பிக்க உதவும் விசேட பயிற்சிநெறியை வலய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இதற்கான வளவாளர்களாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, உளநல வைத்திய அதிகாரி, பாடசாலை வைத்திய அதிகாரி, சுகாதாரக் கல்வி

உத்தியோகத்தர் ஆகியோரின் சேவையினை பெறமுடியும். அத்துடன் இப் பயிற்சிநெறி சம்பந்தமான இறுவெட்டு, கையேடு மற்றும் நூல் ஆகியவற்றினை சுகாதாரத் திணைக்களத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

3. பாடவிதானத்திலுள்ள இனப்பெருக்க சுகாதாரம் சம்பந்தமான விடயங்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் கற்பிக்கப்படுவதை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். இப்பாடங்கள் சார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள் தமது பாடசாலைத் தரிசிப்பின்போது இவ்விடயத்தை வழிப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மாதாந்தம் அறிக்கையிடல் வேண்டும்.

4. வலய மற்றும் பாடசாலை மட்டப் பரீட்சைகளில் இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய வினாக்களை உள்ளடக்கல் வேண்டும். இதற்குப் பொறுப்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் இருத்தல் வேண்டும்.

5. மாணவர்களுக்கு குடியுரிமைக் கல்விப் பாடத்தினைச் செயலாற்றல்திறனோடு கற்பிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். இப்பாடத்தில் உள்ள வாழ்க்கைத்தேர்ச்சிக்குரிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களைப் பயன்படுத்த முடியும். இதற்குப் பொறுப்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இருத்தல் வேண்டும். மேலும் மாகாண மற்றும் வலய மட்டத்திலே இடம்பெறும் தரம் 9 இற்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைப் பரீட்சைகளில் குடியுரிமைக் கல்வி மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான வினாக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். இதற்குப் பொறுப்பாக விஷேட குழுவொன்று அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் இப் பகுதிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

6. சிறுவர்களிடையே ஜனநாயகப் பண்புகள் பற்றிய புரிதல்களை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சிறுவர் பாராளுமன்ற முறைமையினை 1AB மற்றும் 1C பாடசாலைகளில் அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

7. ஒவ்வொரு பாடசாலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆனால் தத்தமது பாடசாலைகளுக்குரிய தனித்துவத்தைப் பேணக்கூடிய வகையில் மாணவர்களிற்கான ஒழுக்கக் கோவையினை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்றுத் தயாரித்து, வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்று, அதனை அதிபர்கள் - மாணவர்கள் - பெற்றோர்கள் என்போருக்கிடையேயான முத்தரப்பு உடன்படிக்கையுடன் அமுலாக்க வேண்டும். அத்துடன் மாகாண மட்டத்தில் அதிபர் மற்றும் ஆசிரியர்களிற்கான ஒழுக்கக் கோவை ஒன்றை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் ஆலோசனைகளை உள்ளீர்த்துத் தயாரித்து, அது நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும். இதற்குப் பொறுப்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் இருப்பார்கள்.

8. வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்களின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டிக் கருத்தரங்குகளை வருடாந்தம் நடத்த வேண்டும். இந்தக் கருத்தரங்குகளை தரம் 10 இற்கு முன்பிலிருந்தே நடத்துவது பொருத்தமானதாக இருக்கும். இந்தக் கருத்தரங்குகள் வலய மட்டத்திலுள்ள தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்படுவதுடன், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டிக் கைநூல்களும் தயாரித்து வழங்கப்படவேண்டும்.

9. மத்திய கல்வி அமைச்சின் 12/2015 இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, ஒரு பாடசாலை தரம் ஆறு தொடக்கம் தரம் 13 வரை 300 மாணவர்களிற்கு அதிகமாகக் கொண்டிருப்பின் அப்பாடசாலை ஒரு முழுநேர வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியரைக் கொண்டிருக்க வேண்டும். போதியளவு வழிகாட்டலும் ஆலோசனைகளும் ஆசிரியர்களை நியமிப்பதனை மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும். இவர்களின் பிரதான பணி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் உளநன்னிலையைப் பேணுதல் என்பதாகும். இவர்களுக்கான பொருத்தமான பயிற்சி மற்றும் மேற்பார்வைகள் கிடைப்பதனை மாகாணமட்ட உளசமூக வளநிலையமும், வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்களும் உறுதி செய்ய வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட, பொருத்தமான மற்றும் அனுபவம் மிக்க வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்கள் வாரத்திற்கு ஒரு நாள் அண்மையிலுள்ள வைத்தியசாலையின் உளமருத்துவப் பிரிவில் சிறுவர் உளநலம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

11. வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களிற்கான ஒழுக்கக் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு, வழங்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுவது உறுதி செய்ப்பட வேண்டும். இதற்குப் பொறுப்பாக மாகாண மட்ட உளசமூக வளநிலையம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வழிகாட்டலும் ஆலேரசனைக்கும் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

12. வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களுக்கான சகபாடி ஆதரவுக்குழு மேற்பார்வையுடனான மாதாந்தக் கலந்துரையாடல்கள் மாகாண, வலய மட்டத்திலே ஏற்பாடு செய்யப்பட்டு, அதிலே கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரச்சினைகள் என்பன அறிக்கைப்படுத்தி, மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கிரமமான முறையில் அனுப்பப்பட வேண்டும்.

13. இதற்கு மேலதிகமாக பாடசாலை முறைமைக்குள் அடங்கும் சகல நிறுவனங்களிலும் உள்ள உத்தியோகத்தர்கள் வெற்றிலை சப்புதல், புகைத்தல், மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் பாவித்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது மிகவும் அவசியமானது. இது மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டுத்திட்டத்தின் அமுலாக்கத்திற்கு அடிப்படையானது. அதனை மீறுவோர் இலங்கை சனநாயகக்குடியரசின் தாபனக் கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் வாசகத்தின் பிரகாரம் நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும்.

சி. சத்தியசீலன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்
யாழ்ப்பாணம்

செயலாளர்

**பிரதிகள்:**

1. கௌரவ முதலமைச்சர், வடக்கு மாகாண சபை
2. கௌரவ அமைச்சர், கல்வி அமைச்சு, வடமாகாணம்
3. கௌரவ அமைச்சர், சுகாதார அமைச்சு, வடமாகாணம்
4. பிரதம செயலாளர், பிரதம செயலாளரின் அலுவலகம், வடமாகாணம்
5. செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்
6. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்
7. மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர், வடமாகாணம்
8. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
9. உள வைத்திய நிபுணர்/ வைத்திய அதிகாரி (உளநலம்) - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
10. தாய்சேய் நல வைத்திய அதிகாரி - அனைத்துப் பிரிவு, அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
11. சுகாதார வைத்திய அதிகாரி - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
12. பாடசாலை வைத்திய அதிகாரி, வட மாகாணம்

சமூக மருத்துவ உத்தியோகத்தர் (சுதேச மருத்துவம்) - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)


| | | | |
|---|---|---|---|
| செயலாளர் / ලේකම් / Secretary | 021-2219259 | அலுவலகம் / කාර්යාලය / Office | 021-3202704 (Admn.)<br>021-3202568 (Dev.)<br>021-3202281 (Plan.)<br>021-3202309 (Acct.)<br>021-7390665 (DSW) |
| தொலைநகலி / ෆැක්ස් / Fax | 021-2220794 | | |